# KAYALPATTINAM MUNICIPALITY

KAYALPATTINAM MUNICIPALITY COUNCIL MONTH OF MAY FORM 3

Minutes of the Meeting held on 28.09.2018

<table>
<tr><th>Date of council meeting</th><th>Deceison Number</th><th>Subject of the Agenda</th><th>Resolution</th></tr>
<tr><td>28.09.2018</td><td>1672</td><td>
<u>மன்றப் பொருள்:1</u><br>
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை ண்:11, நாள்:12.01.1994–ன் படி காயல்பட்டணம் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் தொழில் ஸ்தாபனங்கள் மற்றும் பணியாளர்களின் அரையாண்டு தொழில்வரி 01.10.2013 முதல் கீழ்க்குறிப்பிட்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>அரையாண்டு வருமானம்</th><th>வரி தொகை (ரூ)</th></tr>
<tr><td>1</td><td>ரூ.21000–வரை</td><td>–</td></tr>
<tr><td>2</td><td>ரூ.21001 முதல் ரூ.30000 வரை</td><td>120/–</td></tr>
<tr><td>3</td><td>ரூ.30001 முதல் ரூ.45000 வரை</td><td>300/–</td></tr>
<tr><td>4</td><td>ரூ.45001 முதல் ரூ.60000 வரை</td><td>590/–</td></tr>
<tr><td>5</td><td>ரூ.60001 முதல் ரூ.75000 வரை</td><td>890/–</td></tr>
<tr><td>6</td><td>ரூ.75001–க்கு மேல்</td><td>1175/–</td></tr>
</table>
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 21/05/2018–ம் தேதிய ந.க.எண்:12503/18/ஆர்.1, சுற்றறிக்கையின் அடிப்படையில் 01/10/2018 முதல் தொழில்வரி 25% வீதத்திற்கு குறையாமல் 35% வீதத்திற்கு மிகாமல் 5 வருடத்திற்கு ஒருமுறை தொழில்வரி சீராய்வு செய்ய அறிவுரை வழங்கப்பட்டதன் அடிப்படையில் காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட தொழில் ஸ்தாபனங்கள் மற்றும் பணியாளர்களின் அரையாண்டு தொழில்வரியை 01/10/2018 முதல் (2018–2019 இரண்டாவது அரையாண்டு) இந்நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு அதிகபட்சம் 35% உயர்வு செய்து கீழ்க்காணும் விபரப்படி தொழில்வரி நிர்ணயம் செய்யப்பட்டு இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்:1580, நாள்:30.05.2018–ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| வ.எண் | அரையாண்டு சராசரி வருமானம்(ரூ) | தற்போது வசூல் செய்யப்பட்டுவரும் தொழில்வரி(ரூ) | 35% உயர்வு(ரூ) | 01/10/2018 முதல் நிர்ணயம் செய்யப்படும் தொகை(ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 21000 வரை | – | – | – |
| 2 | 21001 முதல் 30000 வரை | 120/– | 42/– | 162/– |
| 3 | 30001 முதல் 45000 வரை | 300/– | 105/– | 405/– |
| 4 | 45001 முதல் 60000 வரை | 590/– | 207/– | 797/– |
| 5 | 60001 முதல் 75000 வரை | 890/– | 312/– | 1202/– |
| 6 | 75001 க்கு மேல் | 1175/– | 411/– | 1586/– |

மேற்படி நிர்ணயிக்கப்பட்ட புதிய தொழில்வரி விகிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:12503/2018/ஆர்1, நாள்:21.05.2018–ன்படி தொழில்வரிவிகிதம் நிர்ணயம் செய்யப்படாமல் கூடுதல் தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொழில்வரி விகிதத்தினை சுற்றறிக்கையின்படி திருத்தம் செய்து கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்ய மன்ற அனுமதிக்கு.

| வ.எண் | அரையாண்டு சராசரி வருமானம் (ரூ) | தற்போது வசூல் செய்யப்பட்டுவரும் தொழில்வரி(ரூ) | 01/10/2018 முதல் நிர்ணயம் செய்யப்படும் தொகை(ரூ) |
|---|---|---|---|
| 1 | 21000 வரை | – | – |
| 2 | 21001 முதல் 30000 வரை | 120/– | 150/– |
| 3 | 30001 முதல் 45000 வரை | 300/– | 402/– |
| 4 | 45001 முதல் 60000 வரை | 590/– | 792/– |

| | | | |
|---|---|---|---|
| | | <table><tr><td>5</td><td>60001 முதல் 75000 வரை</td><td>890/–</td><td>1192/–</td></tr><tr><td>6</td><td>75001 க்கு மேல்</td><td>1175/–</td><td>1250/–</td></tr></table> | |
| | 1673 | **மன்றப்பொருள்: 2**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சி சட்டம் 1920 விதி எண். 15ன் கீழ் மேற்கொண்ட பணிகளுக்கு வழங்கப்பட்ட பட்டியல் தொடர்பான பதிவேடுகள் மன்றத்தின் பார்வைக்கு. | பார்வையிடப்பட்டது |
| | 1674 | **மன்றப்பொருள்: 3**<br>காயல்பட்டணம் நகராட்சிப் பகுதியில் உருவாகும் குப்பைகளை மக்கும் குப்பை, மட்காத குப்பை என பிரித்து உரம் தயாரிக்கும் பணிக்கு Micro Compost Centar மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆலோசனைப்படி எடுக்கப்பட்டுவருகிறது. நம் நகராட்சியில் உள்ள 18 வார்டுகளில் இரண்டு Micro Compost Centar மற்றும் 2 Onsite Composting பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. அதில் வார்டு வாரியாக Autocard Map தயார் செய்யப்பட்டுவருகிறது. மேற்படி Micro Compost Centar Map தயார் செய்த வகைக்கு Madan Construction நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.15450/– மட்டும் இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1675 | **மன்றப்பொருள்: 4**<br>காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மூலம் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வடகிழக்கு பருவமழை குறித்த முன்னேற்பாடுகள் குறித்து நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில் தேவையான அளவு கொசுப்புழு ஒழிப்பு மருந்துகள் மாலத்தியான், பைரத்திரம், அபேட், பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்பு, கிருமிநாசினி போன்றவைகளை கையிருப்பு வைக்க வலியுறுத்தப்பட்டது. அதன் பேரில் நம் நகராட்சிக்கு பைரித்திரம் 100 லிட்டர், அபேட் மருந்து 100 லிட்டர், மாலத்தியான் 100 லிட்டர் போன்றவற்றை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்ற தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சி நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.3,00,000/– ஆகும். மேற்படி செலவு தொகையினை இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1676 | **மன்றப்பொருள்: 5**<br>காயல்பட்டணம் நகராட்சி பொதுசுகாதார வாகனம் எண்:TN69 S0146 சுவராஜ்மஸ்தா மினிலாரிக்கு 2018—19—ம் ஆண்டுக்கு மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கு ஓட்டுநர் அறிக்கை வழங்கியுள்ளார். அதன்படி மேற்படி மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.191951/— ஆகும். மேற்படி செலவு தொகையினை இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1677 | **மன்றப்பொருள்: 6**<br>காயல்பட்டணம் நகராட்சியில் கடந்த ஆண்டுகளில் வடகிழக்கு பருவமழையின் காரணமாக காயல்பட்டணத்தில் அதிக அளவு மழை பெய்ததால் நகராட்சிப்பகுதிகளில் ஆங்காங்கே மழைநீர் தேங்கி பொதுமக்களின் இயல்ப வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. மேலும் கடந்தாண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் அதிகப்படியான மழை காயல்பட்டணத்தில் பெய்ததால் நகராட்சியில் எல்லாப்பகுதிகளிலும் மழைநீர் அதிக அளவு தேங்கியது . மேலும் நகராட்சியில் போதுமான மழைநீர் வடிகால் வசதி இல்லாததால் ஜே.சி.பி இயந்திரம் பயன்படுத்தி கால்வாய்தோண்டி மழைநீரை வெளியேற்ற நகராட்சியின் மூலம் போர்க்கால அடிப்படையில் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆதலால் தற்பொழுது இந்தாண்டும் (2018) வடகிழக்கு பருவ மழை காலம் துவங்கியுள்ளதால் கடந்த வருடங்களைப்போல் பாதிப்புகள் ஏதும் ஏற்படாத வண்ணம் முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் ,தூத்துக்குடி அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரையின்படி முன் எச்சரிக்கை நடவடிக்கையாக மழைநீர் தேங்கும் பகுதிகளை கண்டறிந்து தேங்கும் மழைநீர் எளிதில் வடிந்தோடும் விதமாக ஜே.சி.பி இயந்திரம் பயன்படுத்தி கால்வாய்தோண்டி மழைநீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தயார் நிலையில் இருப்பதற்கும் ஜே.சி.பி பயன்படுத்தி பணி செய்வதற்கும் ஏற்படும் உத்தேச செலவினத்தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1678 | **மன்றப்பொருள்: 7**<br>வடகிழக்கு பருவ மழை 2018ன் காரணமாக காயல்பட்டணம் நகராட்சியில் தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்,தூத்துக்குடி மாவட்டம் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதால் நகராட்சியின் மக்கள் வசிக்கும் தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை உடனடியாக ஆயில் இஞ்சின் பயன்படுத்தி வெளியேற்றும் பணி மேற்கொள்ள ஏற்படும் உத்தேச செலவினத்தொகை ரூ.9.00இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1679 | **<u>மன்றப்பொருள்: 8</u>**<br>வடகிழக்கு பருவ மழை 2018ன் காரணமாக காயல்பட்டணம் நகராட்சியில் தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்,தூத்துக்குடி மாவட்டம் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதால் நகராட்சியின் மக்கள் வசிக்கும் தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை ஜே.சி.பி இயந்திரம் மற்றும் ஆயில் இஞ்சின் பயன்படுத்தி வெளியேற்ற முடியாத இடங்களில் 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டிராக்டர் டேங்கர் வாகனம் பயன்படுத்தி உறிஞ்சி எடுத்து அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ள ஏற்படும் உத்தேச செலவினத்தொகை ரூ.6.00இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1680 | **<u>மன்றப்பொருள்: 9</u>**<br>காயல்பட்டணம் நகராட்சிக்கு, இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,தூத்துக்குடி அவர்களின் கடித நக.எண்.அ2/4942/2018 நாள்.02.07.2018ன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2018-19ன் கீழ் 14வது வார்டுக்குட்பட்ட கீழலட்சுமி புரம் வாட்டர் டேங் (மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி) அருகில் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கு ரூ.1.00இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கடிதம் வரப்பெற்றுள்ளது.ஆனால் மேற்கண்ட சாலையானது சுமார் 0.600கி.மீட்டர் நீளமுள்ளது. இச்சாலையினை தார்ச்சாலையாக மேம்பாடு செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.36.00இலட்சம் ஆகும் என நகராட்சி பொறியாளரால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.எனவே மேற்கண்ட சாலையினை முழுமையாக மேம்பாடு செய்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.36.00இலட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு ரூ.1.00இலட்சம் போக மீதமுள்ள தொகையான ரூ.35.00இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் செலவு செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி குறைவாக உள்ளதால் கூடுதல் நிதி பெற்ற பிறகு இப்பொருளை பரிசீலனை செய்யலாம் தற்போது மன்றப்பொருள் மறுக்கப்படுகிறது |
| | | | |